# நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் போதித்த நற்பண்புகள் 3

[ Tamil – **தமிழ்** – تاميلي ]

...இம்தியாஸ் யூசுப் ஸலபி

2014 - 1435

IslamHouse.com

# مكاريم الأخلاق

# من موارد محمد صلى الله عليه وسلم- ٣

« باللغة التاميلية »

محمد إمتياز يوسف

2014 - 1435

IslamHouse.com

# நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் போதித்த நற்பண்புகள். 0ரு

## M.S.M.இம்தியாஸ் யூசுப் ஸலபி

## பணிவு 0ரு

பண்பாட்டின் உயர் ஸ்தானமாக கணிக்கப் படுவது பணிவாகும். உயர்வு தாழ்வினை அகற்றி, உளப்பூர்வமாக நட்புக் கொள்ள வழிகாட்டுவதும் பணிவாகும். ஆண்டான். அடியான், எஜமான்-தொழிலாளி, படித்தவன்-படிக்காதவன், பணக்காரன்-ஏழை என்ற தற்பெருமையை அகற்றி, சுயமரியாதை யுடன் அடுத்தவனை மதிப்பதே பணிவாகும்.

தன்னைக் கண்டால் எழுந்து நிற்க வேண்டும். தனக்காக காலில் விழுந்து வணங்க வேண்டும் என்ற சுயமரியா தையை எதிர்பார்த்து அடுத்தவனை கேவலமாக கணிக்கும் செயற் பாடு மட்டுமன்றி அடிமைத் தனத்தை வளர்ப் பதாகவும் அமையும்.

பணத்தால் பதவியால் உயர்வதை விட பணிவால் உயர்வதே மிகப் பெரிய செல்வம்.

கல்வி, பணம், பதவி, பட்டம் நம்மிடம் சேரும் போது அதைக் கொண்டு மற்றவர்கள் பயன்பெறும் வகையில் இருந்தாலே நமக்கு உயர்வு. மாறாக அந்த புகழ் தரும் போதையால் மற்றவர்களது உணர்வுகள் புண்படுத்தும் விதமாக நடந்தால் இழிவும் அவமானமும் மேகங்கள் போல் எமக்கு மேலால் சூழ்ந்து கொண்டிருக்கும்.

- பிறரது பேச்சை செவிதாழ்த்திக் கேட்பதும்,
- மௌனமாக இருந்து அவதானிப்பதும்,
- புன்னகையுடன் தவறுகளை ஏற்றுக் கொள்வதும்
- தாழ்ந்த குரலில் இனிமையாக உரையாடுவதும்
- சிரித்த முகத்துடன் அடுத்தவர்களை வரவேற்பதும்

பணிவின் சிகரமாகும்.

மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்து,

ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதற்காக உங்களை கிளைகளாகவும் கோத்திரங் களாகவும் ஆக்கினோம். உங்களில் மிகப் பயபக்தியுடையவரே நிச்சயமாக அல்லாஹ் விடத்தில் உங்களில் மிக்க கண்ணி யத்திற்குரியவர்.அல்லாஹ் நன்றிந்தவன். நுட்ப மானவன். (49:13)

அல்லாஹ்வை அஞ்சி பயபக்தியுடன் நடக்கும் இறை விசு வாசியின் பணிவு மிக உயர் வானது என்பதை இவ்வசனம் தெளிவுபடுத்துகிறது. குலத்தால், நிறத்தால், செல்வத்தால், படிப்பால் ஒருவன் பெருமை பாராட்டுவதால் அவன் உயர்ந்தவனாகி விடமாட்டான். அத்தனை இருந்தும் அடக்கமாக அடுத்தவர்களை மதித்து இறையச்சமுடன் நடப்பனே உயர்ந்த வனா விடுகிறான்.

அற்பமான ஒரு துளி நீரிலிருந்து படைக்கப் பட்டவன் மனிதன் என்ற குர்ஆனிய சிந்தனையை அவனுக்குள் ஏற்படுத்திக் கொண்டால் பணிவு என்னும் பாசறைக்குள் பதுங்கிக் கொள்ள முடியும். அடக்கியாள

வேண்டும் என்ற அகம்பாவமோ மமதை கொள்ளும் அறிவீனமோ எழுந் திடாது. இத்தகைய உயரிய சிந்தனையே இஸ்லாம் எமக்குப் போதிக்கிறது.

وَعِبَادُ الرَّحْمَنِ الَّذِينَ يَمْشُونَ عَلَى الْأَرْضِ هَوْنًا وَإِذَا خَاطَبَهُمُ الْجَاهِلُونَ قَالُوا سَلَامًا

அர்ரஹ்மானின் அடியார்கள் பூமியில் பணிவுடன் நடப்பார்கள். அறிவீனர்கள் அவர்களுடன் தர்க்கிததால் (உங் களுக்கு) ஸலாம் (உண்டாகட்டும்) எனக் கூறுவார்கள். (25:63)

பூமியில் நடக்கும்போது அடுத்தவர்களை மதிக்கும் வகையில் அடுத்தவர்களின் தேவைகளில் கவனம் செலுத்தும் வகையில் நடப்பதும் மிகப்பெரும் பணிவாகும்.

பெறுமை; ஆணவம், அகம்பாவத்துடனோ அடுத்தவர்களை மதிக்காத வகையில் நடப்பதை இஸ்லாம் கண்டிக்கிறது.

وَلَا تُصَعِّرْ خَدَّكَ لِلنَّاسِ وَلَا تَمْشِ فِي الْأَرْضِ مَرَحًا إِنَّ اللَّهَ لَا يُحِبُّ كُلَّ مُخْتَالٍ فَخُورٍ (١٨) وَاقْصِدْ فِي مَشْيِكَ وَاغْضُضْ مِنْ صَوْتِكَ إِنَّ أَنْكَرَ الْأَصْوَاتِ لَصَوْتُ الْحَمِيرِ (١٩

(பெருமை கொண்டு) உனது மகத்தை மனிதர் களை விட்டும் திருப்பி விடாதே. மேலும் பூமியில் கர்வத்துடன் நடக்காதே. நிச்சயமாக அல்லாஹ் ஆணவம் கொண்ட எந்தப் பெருமைக் காரனையும் நேசிக்க மாட்டான்.

உனது நடையில் நடுத்தரத்தைக் கடைப் பிடிப்பாயாக. மேலும் உனது சப்தத்தைத் தாழ்த்திக் கொள்வாயாக. சப்தங்களில் மிக வெறுக்கத்தக்கது கழுதையின் சப்த மாகும். (31:18-19)

லுக்மான் (அலை) அவர்கள் தனது மகனுக்கு செய்த உப தேசங்களில் ஒரு பகுதி இது. பணிவையும் பண்பாட்டையும் கடைப்பிடிக்கும்

வழிகளை மிக அழகாகக் கற்றுக் கொடுக்கிறார்கள்.

பாதையில் நடக்கும்போது ஒரு முஃமினின் நடவடிக்கை இப்படித்தான் இருக்கும் என்பதை காட்டக் கூடியதாக பண்புகள் அமைய வேண்டும் என்பதை இந்த உப தேசத்தின் மூலம் வலியுறுத்துகிறார்கள்.

கூச்சல் குழப்பம் பண்ணுதல், வீண் வேடிக்கைளில் ஈடுபடுதல், வீண் வம்புகளை வளர்த்தல், வீணான தர்க்கங்களில் நேரத்தைக் கழித்தல் போன்ற காரியங்களில் ஒரு முஃமின் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள மாட்டான். மாறாக நல்லதை பேசி, நல்லதை ஏவி. தீயதை சுட்டிக்காட்டி விட்டு நகர்ந்து விடுவான்.

عَنْ عِيَاضِ بْنِ حِمَارٍ أَخِي بَنِي مُجَاشِعٍ، قَالَ: قَامَ فِينَا رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ذَاتَ يَوْمٍ خَطِيبًا، فَقَالَ: «إِنَّ اللهَ أَمَرَنِي» وَسَاقَ الْحَدِيثَ بِمِثْلِ حَدِيثِ هِشَامٍ، عَنْ قَتَادَةَ، وَزَادَ فِيهِ «وَإِنَّ اللهَ أَوْحَى إِلَيَّ أَنْ

تَوَاضَعُوا حَتَّى لَا يَفْخَرَ أَحَدٌ عَلَى أَحَدٍ، وَلَا يَبْغِي أَحَدٌ عَلَى أَحَدٍ»

நீங்கள் பணிவாக நடவுங்கள். ஒருவர் மற்றவரை விட பெருமை கொள்ள வேண்டாம். ஒருவர் மற்றவருக்கு அநியாயம் செய்ய வேண்டாம் என அல்லாஹ் எனக்கு வஹீ அறிவித்தான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: இயாழ் இப்னு ஹிமார் (ரழி) நூல்: முஸ்லிம்)

பணிவின் மூலம் பெருமையை நீக்கிக் கொள்ளும் விடத்தை நபியவர்கள் இந்த ஹதீஸில் கூறுகிறார்கள்.

தர்மம் செய்யும்போது செல்வம் குறைவது போல் உணர்ந்தாலும் அல்லாஹ் அதை குறைய விடாது பெருகச் செய் கிறான்.

மன்னிப்பு வழங்குதல், பணிந்து நடத்தல் மூலம் சிறுமை படுகிறோமோ எனத் தோன் றினாலும் அதன் மூலம் அல்லாஹ் கண்ணியத்தையும் உயர்வையும் மேலோங்கச் செய்கிறான்.

அல்லாஹ்வின் வாக்கு ஒரு போதும் பொய்யாவதில்லை.

عَنْ أَبِي هُرَيْرَةَ، عَنْ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، قَالَ: «مَا نَقَصَتْ صَدَقَةٌ مِنْ مَالٍ، وَمَا زَادَ اللهُ عَبْدًا بِعَفْوٍ، إِلَّا عِزًّا، وَمَا تَوَاضَعَ أَحَدٌ لِلَّهِ إِلَّا رَفَعَهُ اللهُ»

தர்மம் செய்வது சொத்தில் எதையும் குறைத்து விடாது. மேலும் ஓர் அடியான் பிறரை மனிப்பதன் மூலம் அல்லாஹ் அவரது கண்ணியத்தை உயர்த்தாமல் இருப்பதில்லை. மேலும் அல்லாஹ்வுக்கு ஒரு அடியான் பணிந்தால் அவருக்குரிய தகுதியை அல்லாஹ் உயர்த்தாமல் இருப்பதில்லை என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரழி), நூல்: முஸ்லிம்)

ஒருவரை மன்னிப்பதால் எக்குறைவும் ஏற்படப் போவதில்லை. பணிந்து போவதால் எந்த தீமையும் அணுகப் போவதில்லை. மாறாக

அல்லாஹ் விடத்தில் கண்ணியமும் அந்தஸ்து மே அதிகரித்துச் செல்கிறது. சிலருக்காக சில விடயங்களை நன்மை கருதி நாம் விட்டுக் கொடுத்து பணிந்து போவதால் உலகியல் ரீதியில் நட்டம் ஏற்பட் டாலும் மறுமையில் அது எம்மை பாதுகாக்கும் நற்செய லாக வந்து நிற்கும்.

பணிவு மேற்கொள்ளப்படாத எல்லா காரியங்களிலும் பெருமையும் அகங்காரமும் முன்னுரிமை பெரும் என்பதை மறந்து விடக் கூடாது.

பணிவின் உயர்விடமாக இருந்து செயற்பட்டு காட்டிய முன்மாதிரியை நபி (ஸல்) அவர்கள் அவர்களிடத்தில் நிறையவே காண முடிகிறது.
அனஸ் (ரழி) அவர்கள் சிறுவர்களைக் கடந்து செல்லும் போது சிறுவர்களுக்கு ஸலாம் கூறுவார்கள். இவ்வாறு தான் நபியவர்களும் சிறார்களுக்கு ஸலாம் கூறுபவர்களாக இருந்தார்கள் எனக் குறிப்பிட்டார்கள். (நூல்: புகாரி, முஸ்லிம்)

நபி என்ற உயர் பதவியும் அந்தஸ்தும் இருந்தாலும் மனிதன் என்ற பண்பாடினை நபியவர்கள் விட்டதில்லை. சிறார்களையும் மதித்து, அவர்களுக்கும் அன்புடன் ஸலாம் கூறி, பணிவை காண்பித்தார்கள். நபியவர் களின் இந்த பண்பாடினை சிறுவயதிலிருந்து அவதானித்து வந்த அனஸ் (ரழி) அவர்கள் தங்களது வாழ்க்கையிலும் கடைப் பிடிக்கலா னார்கள்.

மதீனாவின் அடிமைச் சிறுமி ஒருத்தி நபி (ஸல்) அவர்களின் கையைப் பிடித்து, தான் நினைத்த இடங்களுக்கு நபியவர்களை அழைத்துச் செல்வாள் என அனஸ் (ரழி) அறிவிக்கிறார்கள். (நூல்: புகாரி)

இறைத்தூதர் என்ற நிலையிலும் சின்னப் பிள்ளையின் உணர்வுகளையும் தேவைகளை யும் மதித்து -உயர்வு தாழ்வு கற்பிக்காது- நபியவர்கள் நடந்து கொண்டார்கள். அச்சிறுமியின் ஆசைகள் முடிவுறும் வரை சுற்றி வந்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள் தங்களின் வீட்டில் எப்படி நடந்து கொள்வார்கள் என ஆயிஷா (ரழி) அவர்களிடம் கேட்கப் பட்டது. தன் குடும்பத் தாருக்கு உதவி புரிபவராக நபி (ஸல்) அவர்கள் இருப்பார்கள். தொழுகை நேரம் வந்து விட்டால் தொழுகைக்கு புறப்பட்டு விடுவார் கள் என ஆயிஷா (ரழி) கூறினார்கள். (புகாரி)

மார்க்கப் பணியிலும் சமூகப் பணியிலும் ஈடுபட்டு விட்டு வீட்டுக்குள் நுழைந்தால் வீட்டாரின் தேவைகளை கவனத்தில் கொண்டு பணிபுரியும் நல்லுள்ளம் படைத்த கணவாக நபிகளார் (ஸல்) அவர்கள் தங்களை ஆக்கிக் கொண்டார்கள். சமூகம் தன்னை மதித்து நடப்பதால் வீட்டு வேலைகளில் ஈடுபட முடியாது என்ற மமதையில் நடந்ததே யில்லை.

அல்லாஹ் அனுப்பிய எந்த நபியும் ஆடு மேய்க்காமல் இருந்ததில்லை என நபி (ஸல்) அவர்கள் கூறியபோது நீங்களுமா? என நபித் தோழர்கள் கேட்டார்கள். ஆம், மக்கா வாசிகளுக்காக (ஆடுகளை) சில வெள்ளிக் காசு களுக்கு கூலியாக நான் ஆடு மேய்த்துள்ளேன்

என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரழி), நூல்: புகாரி)

பதவிகளும் பட்டங்களும் வரும்போது சிலர், தங்களுடைய பழங்கால நிலவரங்களை மறந்து விடுவார்கள். பணம் வந்து குவியும்போது ஏழ்மையை மறந்து விடுவார்கள். இப்படிப் பட்ட நிலையிலுள்ளவர்களிடம் ஆணவம் காணப்படுமே தவிர பணிவு காணப்பட மாட்டாது. அல்லாஹ்வின் தூதர் உயர் அந்தஸ்த்தில் இருந்த போதும் ஆன்மீக தலை வராகவும் அரசாங்க தலைவராகவும் இருந்த போது கூட தன்னுடைய கடந்த கால நிலவரத் தைப் புரிந்து பணிவாகவும் பண்பாகவும் நடந்து கொண்டார்கள்.

தொழுகைக்காக முன்னோக்கும் கிப்லாத் திசையில் (பள்ளியிலுள்ள சுவற்றில் யாரோ சிந்திய) சளியை நபி (ஸல்) அவர்கள் கண்டார்கள். இது அவர்களுக்கு மன வருத்தத் தை ஏற்படுத்தியது. அதன் பிரதி பலிப்பு அவர்களின் முகத்திலும் காணப்பட்டது. அவர்கள் எழுந்து (சென்று) தம் கையால்

அதைச் சுரண்டி (சுத்தப்படுத்தி)னார்கள். (அறிவிப்பவர்: அனஸ் (ரழி), நூல்: புகாரி)

பள்ளிவாசலில் காணப்பட்ட அசுத்தை தம்தோழர்களிடம் கூறி நபியவர்கள் சுத்தப் படுத்தியிருக்கலாம். நபியவர்களின் வார்த்தைக்காக, கட்டளைக்காகவே நபித் தோழர்கள் காத்திருக்கிறார்கள். எல்லோருக்கும் பொது வான பள்ளிவாசலில் அசுத்தத்தைக் கண்ட போது தானா கவே எழுந்து சென்று அதனை சுத்தப்படுத்தி விட்டார்கள். தலைவனுக்கு முன்னால் அனைவரும் கூனிக் குணிந்து நிற்கவேண்டும் என்ற அகம்பாவம் இன்றி தலைவனும் தொண்டு செய்து பணிந்து செல்ல வேண்டும் என்ற உயர் பண்பாட்டினை நமக்குப் படித்துத் தருகிறார்கள்.

தொண்டர்களுடன் தலைவன சாதாரணமாக நடக்க வேண்டும் என்ற பணிவினை - தலைமைத்துவத்தின் பண்பினை- மிக எளிமை யாக நடாத்திக் காட்டினார்கள் நபி (ஸல்) அவர்கள்.

அப்துல்லாஹ் இப்னு அம்ரு என்ற நபித்தோழர் தொடராக நோன்பு நோற்றுவருகிறார் என்ற செய்தி நபி (ஸல்) அவர்களிடம் தெரிவிக்கப் பட்டது. நபி (ஸல்) அவர்கள் அந்நபித் தோழரைக் கண்டு அவரது செய்கையை திருத்திக் கொடுப்பதற்குகாக அத்தோழரின் வீட்டை நோக்கிச் சென் றார்கள்.

நபியவர்கள் வீட்டுக்கு வந்தபோது அந் நபித்தோழர் கூளம் நிரப்பப்பட்ட தலைய ணையை நபியவர்கள் உட்காருவதற்காக எடுத்து வைத்து விட்டு அவர் தரையில் அமர்ந்தார். நபியவர்கள் அத்தலையணையில் அமராமல் அவர்களும் தரையில் அமர்ந்து பேசினார்கள். (அச்சந்தர்ப்பத்தில் மாதத்தில் 3 நாட்கள் நோன்பு வைப்பது அல்லது 7 நாட்கள் நோன்பு வைப்பது அல்லது 9 நாட்கள் நோன்பு வைப்பது அல்லது ஒரு நாள் விட்டு ஒருநாள் நோன்பு நோற்பது என்ற அடிப்படையில் சொல்லிக் கொடுத்தார்கள். தொடராக நோன்பு நோற்கக் கூடாது என்றார்கள்) (ஹதீஸின் சுருக்கமான கருத்து நூல்: புகாரி)

தமக்காக உரிய மரியாதை தரப்பட்ட போது கூட தன் தோழர் தரையில் அமர்ந்திருப்பது போல் தரையில் அமர்ந்து உரையாடவே நபி (ஸல்) அவர்கள் விரும்பினார்கள்.

இவ்வாறான நிகழ்வுகள் நிறையவே ஹதீஸ் களில் உண்டு. அடுத்தவர்களையும் மதித்து மனதில் இடம்பிடித்து நல்லதொரு முஃமினாக வாழ்வதற்காக இத்தகைய பண்பாடுகள் நிறையவே நமக்குத் தேவைப்படுகிறன.

எமது தனிப்பட்ட வாழ்வு குடும்ப வாழ்வு சமூக வாழ்வு ஆகியவற்றுக்கு இப்பண்பே வெற்றிக் கான வழியாகும்.